Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2021

**P.W**.4

| | |
|---|---|
| Name | : **திரு.விஜயராஜ்** |
| Father/Husband Name | : திரு.மாரிமுத்து |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**1 முதல் 4 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.** நான் தற்போது அனுபுரத்தில் குடியிருந்து பாவனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி சம்பத்தை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் பாவனி சி.எம்.எம். லோபே லொக்கேஷனில் சில பொருட்கள் காணமால் போயிருந்தது குறித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு படம் வரைந்தார்கள்.அப்போது நானும், சம்பத்தும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

என்னுடைய பணி நேரம் பொதுவாக காலை 9.30 முதல் மாலை 5.30 மணி வரை இருக்கும். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு என்னுடைய பணி முடிந்துவிட்டது என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் நான் செக்யூரிட்டி பணி செய்வதாக சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது என்ன நேரம் என்று நினைவில்லை. நான் அன்றைய தினம் பணியில் இருந்ததாக காட்டும் ஆவணம் எதையும் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அன்றைய தினம் சொன்ன நேரத்தில் நான் பணியில் இல்லை என்றாலும் நான் அந்த நிறுவனத்தின் பணியாளர் என்பதால் காவல் நிலையம் சென்று வழக்கிற்கு ஆதரவாக கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் பார்வை மகசர் வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொருட்கள் காணாமல் போனதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. லோபே லொக்கேஷனில் கதவு சுமார் 12 அடி இருக்கும் என்றால் இருக்கலாம்.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.